# SOUTHERN RAILWAY EMPLOYEES' SANGH

## CENTRAL OFFICE - MEDIA CELL

# இந்திய இரயில்வேயில்
# 10939 போஸ்ட்டுகள் சரண்டர்!
## இரயில்வே அமைச்சகத்தின் தன்னிச்சையான முடிவை SRES-NFIR வன்மையாக கண்டிக்கிறது!

| | | |
|---|---|---|
| L1 | HA, HKA, Assistants, AC Coach Attendants,Bearer etc., | 5163 போஸ்ட்டுகள் |
| L2 | Tech - III (Painter, Carpenter) Commercial Clerk etc., | 2334 போஸ்ட்டுகள் |
| L3 | Commercial Clerk , Store Clerk etc., | 533 போஸ்ட்டுகள் |
| L4 | Jr. Stenographer, Running Room Cook etc., | 915 போஸ்ட்டுகள் |
| L5 | Tech. Gr.I in different trades, Vehicle Driver, Sr. CCTC etc., | 1994 போஸ்ட்டுகள் |
| | மொத்தம் | **10939** போஸ்ட்டுகள் |

**உயிர்காக்கும் முக்கிய காலி பணியிடங்களை சரண்டர்** செய்கின்ற இரயில்வே அமைச்சகத்தின் தான்தோன்றித்தனமான செயலை SRES - NFIR **வன்மையாக கண்டிக்கிறது.**

இந்திய இரயில்வேயில் மருத்துவத்துறையில் உள்ள மருத்துவமனை உதவியாளர்கள் HA, தூய்மை பணி உதவியாளர்கள் HKA, பணிமனை உள்ளிட்ட பல பிரிவுகளில் உள்ள உதவியாளர்கள் ASSISTANTS, AC Coach Attendant மற்றும் Bearer உள்ளிட்ட **லெவல் 1ல் உள்ள 5163 பணியிடங்களை சரண்டர் செய்யும்** இரயில்வே அமைச்சகத்தின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையை **SRES - NFIR வன்மையாக கண்டிக்கிறது.**

இரயில்வே மருத்துவமனை சேவை 24x7 அத்தியாவசிய சேவை. இச்சேவை அனைவருக்கும் அவசர, அவசிய தேவை. இரயில்வே மருத்துவமனைகள், பணிமனைகள் மற்றும் இதர பல பிரிவுகளில் ஏற்கனவே ஆள்பற்றாக்குறை! இவை தெரிந்திருந்தும், இந்திய இரயில்வேயில் இருக்கின்ற முக்கிய பல வேலைகளுக்கு போதிய ஆட்களை உடனே நிரப்புவதற்கு பதிலாக **சரண்டர் செய்ய** துடிக்கும் **இரயில்வே அமைச்சகத்தின் ஏதேச்சதிகார போக்கை** SRES - NFIR **வன்மையாக கண்டிக்கிறது.**

இரயில்வே தொழிலாளர்கள், பென்ஷனர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நலமாக இருக்க வேண்டுமென்றால் இரயில்வே மருத்துவமனைகள் சிறப்பாக இருக்க வேண்டும். இரயில்வே மருத்துவமனைகள் சிறப்பாக இருப்பதற்கு மருத்துவமனை ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது முக்கியம். இரயில்வேயில் மேற்கண்ட 10939 போஸ்ட்டுகளை சரண்டர் செய்யும் **உத்தரவை உடனே ரத்து செய்ய இரயில்வே அமைச்சகத்தை SRES - NFIR வலியுறுத்துகிறது.**

**ஆதாரம் : Ref: Notes of M/o Railways, File No. E(NG)I/2025/PM1/7**

**Circular No. 50/2026**

**CENTRAL OFFICE**

**23.09.2026**

**Dr.M.Raghavaiahji**
President/SRES & GS/NFIR

**V.Gopalakrishnan**
GS/SRES & AGS/NFIR

**M. Suryaprakash**
WP/SRES & WCM/NFIR

**T. Parthiban**
Treasurer/SRES & ZS/NFIR